கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.47/2023**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாதவன் | வயது | 39 |
| தந்தை பெயர் | இராமமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | பியூட்டி பார்லர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூரில் வசித்து பியூட்டி பார்லர் வைத்து தொழில செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.01.2023 ம் தேதி நான் எனது மனைவி அசா.1 வழக்கம் போல் அவரவர் வேலைக்கு சென்று விட்டோம். எனது மனைவி அசா.1 திருவாரூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள CJM Court ல் தற்போது OA ஆக வேலை பார்த்து வருகிறார். சம்பவ சமயத்தில் JM Court ல் OA வேலை பார்த்து வந்தார். அன்றைய தினம் 11.00 மணியளவில் எனது மனைவியுடன் பணிபுரியும் OA சர்மிளா என்பவர் எனக்கு போன் செய்து ஆஜர் எதிரி அசா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து விட்டு சென்று விட்டதாக சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்று பார்த்த போது எனது மவைியின் இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டு இருந்தது. மயக்க நிலையில் இருந்தார். அசா.1 ஐ ஆட்டோ மூலம் திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரத்தை கூறினேன்.

**<u>குறுக்கு விசாரணை.</u>**

வழக்கமாக நாங்கள் இருவரும் தனித்தனியாக வேலைக்கு செல்வோம் என்றால் நான் தான் எனது மனைவியை அவர் வேலை செய்யும் இடத்தில் சென்று விடுவேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று நான் எனது மனைவியை நீதிமன்றத்தில் சென்று விடவில்லை என்றால் சரியல்ல. நான் தான் சென்று விட்டு வந்தேன். நான் போலீசாரிடம்

மேற்படி தகவலை தெரிவித்தேனா என்றால் இல்லை. உண்மையாக நான் சென்று விட்டு இருந்தால் அந்த விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியிருப்பேன். சென்று விடாத காரணத்தினால் தான் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசாரிடம் என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் கூறவில்லை. நான் நடந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக நீதிபதியிடமோ, தலைமை எழுத்தரிடமோ தனிப்பட்ட முறையில் புகார் அளித்தேனா என்றால் தலைமை எழுத்தரிடம் வாய்மொழியாக கூறினேன். தலைமை எழுத்தரிடம் வாய்மொழியாக கூறவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விப்பட்டதாக கூறப்படும் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் எனது மனைவி வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு சென்று அழைத்து வந்ததாக கூறப்படும் தகவல் தவறானது என்றால் சரியல்ல. எனது மனைவி அளித்த பொய் புகாரை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.11 17:32:06 +0530